1973 டிசம்பர் 2]

(இ) கோடியாலம் அணை தண்ணீர் சேமிப்பதற்கான நீர்த் தேக்கம் அல்ல. அது அருகிலுள்ள 200 ஏக்கரா பாசன நிலங்களுக்கு தண்ணீர் கிடைப்பதைத்தான் உறுதிப்படுத்துகிறது. மேலும் அது ஓசூரிலிருந்து சுமார் 18 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. கோடியாலம் அணைக்கட்டிலிருந்து தண்ணீர் எடுப்பதை விட சிக்கனமாய் இருக்கக்கூடிய வேறு மாற்று ஆதாரங்கள் சிக்கனமில்லாதவை என்றும் நிர்மாணிக்க இயலாதது என்றும் அறியப்பட்டால், கோடியாலம் அணைக்கட்டிலிருந்து தண்ணீர் எடுப்பது ஆய்வு செய்யப்படும்.

THIRU B. VENKATASWAMY: We are suffering a lot because of there is non-protected water-supply to Hosur to-day. May I know when exactly this water problem will be solved so far as Hosur is concerned?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அது ஆய்வில் இருப்பதாகச் சொன்னேன். விரைவில் அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

THIRU K. S. KOTHANDARAMIAH: The anicut at Kodavalam is completed. There is the regular flow from South Pennar. Hosur is fastly developing with Government starting many industries there and many industrialists from North India have also come to start some industries in Hosur. Hosur town should therefore be provided with all facilities. Will the Hon. Chief Minister see to it that the pumping establishment is improved?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அதுபற்றி ஆய்வுகள் மேற்கொள்வதற்கான நிலைமைகள் பரிசீலிக்கப்படும்.

சிறந்த நூல்களுக்கான பரிசுத் திட்டம்.

*3. வினா—திரு. கா. வேழவேந்தன்: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சி மன்றத்தின் தரமான நூல்களுக்கு உரிய பரிசளிப்பு திட்டம் விரிவு படுத்தப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) 1971 முதல் இப்பரிசளிப்புத் திட்டத்தின்கீழ் ஒரே தலைப்பின்கீழ் ஒரே முதற்பரிசு ரூ. 1,000 என்றிருந்ததை ஒவ்வொரு தலைப்பின் கீழும் முதற்பரிசு ரூ 2,000-மும் இரண்டாம் பரிசாக ரூ. 1000மும் கொடுக்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தமிழ் மொழியில் சிறந்த நூல்களுக்குப் பரிசு வழங்கும் திட்டத்தின் கீழ் 'குழந்தை இலக்கியம்' என்றொரு தலைப்பினை ஏற்படுத்தவும், அப்படி பரிசளிக்கப்படும் நூல்கள் குறைந்தது 80 பக்கங்களாவது இருக்கவேண்டும் என்றும் திருத்தங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தின்கீழ் எத்தனை நபர்களுக்குப் பரிசு வழங்கப்பட்டிருக்கிறது. அதாவது முதல் பரிசு இரண்டாயிரம் ரூபாய் எவ்வளவு பேருக்கும், ஆயிரம் ரூபாய் பரிசு எவ்வளவு பேருக்கும் வழங்கப்பட்டிருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : முன்பு முதற்பரிசு ஆயிரம் ரூபாய் என்று இருந்தது இப்போது முதற்பரிசு இரண்டாயிரம், இரண்டாவது பரிசு ஆயிரம் என்று ஆக்கப்பட்டிருக்கிறது. கிட்டத்தட்ட 20 தலைப்பின்கீழ் பல்வேறு எழுத்தாளர்கள் பரிசுகளைப் பெறுவார்கள். அந்த விழா இனிமேல்தான் நடைபெறும்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : May I know whether members of the Tamil Research Council meet do select each book for the prizes? May I know the subjects for which prizes are given?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இதற்கு என்று ஒவ்வொரு தலைப்பு பற்றியும், கவிதை, இசை, நாவல், மொழி இலக்கணம், மன இயல், பொருளாதாரம், அரசியல், வணிக இயல், தொழில் நுட்ப இயல், மருத்துவம், நாடகம், கட்டுரை, வாழ்க்கை வரலாறு போன்று பல்வேறு துறைகளில் அந்தந்தத் துறைகளில் சிறப்புப் பெற்றவர்களுக்கு அந்தந்த துறையில் உள்ள வல்லுநர்களைக் கொண்ட குழு அமைக்கப்பட்டு ஒவ்வொரு துறையிலும் சிறந்தவர்கள் என்று தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்குப் பரிசு வழங்கப்படும்.

1972 டிசம்பர் 2]

திருமதி த. ந. அனந்தநாயகி : நிபுணர்களை எப்படி தேர்ந்தெடுத்தீர்கள்? என்னென்ன முறைகள் கையாளப்பட்டன? நான்-அபிஷியல்ஸைப் போட்டிருக்கிறீர்களா அல்லது அதிகாரிகளைப் போட்டிருக்கிறீர்களா என்பதை விளக்க முன்வருவார்களா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : முழு விவரங்களுக்கு தனிக் கேள்வி கேட்டால் கொடுக்கப்படும். நான்-அபிஷியல்ஸ்தான் இருக்கிறார்கள்.

Books for Tamil Medium Courses

* 4 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for **Education and Local Administration be pleased to state—**

(a) whether it is a fact that the Government have requested (1) public men and (2) authors to write books for Tamil Medium courses of study;

(b) if so, the details thereof; and

(c) the basis on which these men are selected?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) தமிழில் கல்லூரிப் பாடநூல்களை வெளியிடும் பொறுப்பை ஏற்றிருக்கும் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், பயிற்சிமொழி தமிழாகவுள்ள வகுப்புகளுக்கானப் புத்தகங்களை எழுதுமாறு நூல் ஆசிரியர்களைக் கேட்டுக் கொண்டுள்ளது.

(இ) பல்வேறு பாடங்களில் புத்தகங்களை எழுதப் பல்வகையான துறைகளிலிருக்கும் ஏறக்குறைய 29 நபர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

(உ) பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், கல்லூரி முதல்வர்கள் முதலியவர்களிடமிருந்து பெறப்பட்ட கருத்துக்கள் பரிந்துரைகள் இவைகளை ஆதாரமாகக்கொண்டு நூல் ஆசிரியர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றார்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி : படிக்கிற மாணவர்களுக்குக் குறித்த காலத்தில் சரியான நூல்கள் கிடைப்பதில்லை என்பது அரசுக்குத் தெரியுமா? அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசு எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இதுவரையில் 17 லட்சம் ரூபாய்க்கு மேல் செலவழிக்கப்பட்டு நூல்கள் கொண்டு